1990 மே 11] [திரு. கே. பி. கந்தசாமி]

வருகிறது. இந்த 5 செண்ட் நிலத்தையும் ஏறத்தாழ 25 ஆண்டுக்கு முன்பு தனியார் ஒருவரிடமிருந்து நான்தான் கோவில் பெயரில் வாங்கிக் கொடுத்தேன். தற்சமயம் எங்களது குடும்பத் திலுள்ள அறக்கட்டளை சார்பில் திருமண மண்டபம் கட்டி அருள்மிகு முத்தாரம்மன் கோவில் வசம் ஒப்படைக்க இருக் கிறோம். இந்தப் புதிய திருமண மண்டபத்தின் ஒரு பகுதியாக தொண்டர் ஆறுமுக நாயனார் படிப்பகம், அது தவிர ஆறுமுக நாயனார் கலை அரங்கம் அமைக்க ஊரிலுள்ள பெரியவர்கள் முடிவு செய்தனர். காமராஜர் பெயர் பொறித்த கருங்கல் பலகையும் இந்தப் புதிய கட்டிடத்தில் பதிக்கப்படும்.

அந்தச் சம்பவம் பற்றி சிதம்பர நாடார் மகன் ஜெயராமன், அவர் மட்டும்தான் 35 ஆண்டுக் காலமாக தன்னுடைய வீட்டில் இருந்து வருகிற தன்னுடைய தந்தையார் பெயர் பொறித்த கல் பலகையை என்ன செய்வது என்று அறியாது தவறான தகவல் களைத் தந்து என் மீது பழி சுமத்தும் பிரச்சாரத்தைச் செய்து கொண்டு இருக்கிறார். எவருக்கும் நேச்சுரல் ஜஸ்டிஸ் அங்கே மறுக்கப்படவில்லை.

'' எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு ''

என்ற வள்ளுவர் வாழ்வியல் இலக்கணத்தை இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே கடைப் பிடித்து இருக்கலாம். நான் இந்த அவையில் இல்லாதபோது என்மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சுமத்தினார்.** இருந்தபோதிலும் எங்கள் பகுதியிலே செய்யப்படுகின்ற தவ றான பிரச்சாரத்தை இங்கே சட்டப் பேரவையிலேயும் கிளப்பி அதன் காரணமாக இந்த அவைக்கும், இந்த அவையின் மூலமாக நாட்டுக்கும் தெளிவான விளக்கம் தரக்கூடிய வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்தித் தந்த குமரி அனந்தன் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

10-35 மணி

4. அறிவிப்புகள்.

(அ) பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி, தாம் பதவியில் இருந்து ஓய்வுபெற இருப்பதையொட்டிப் பேரவைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1990 மே 11

பேரவைச் செயலாளர் திரு.சி. கு. இராமசாமி அவர்களிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்துள்ளது. பாராளுமன்ற மரபுப்படி, அக்கடிதத்தைப் பேரவை உறுப்பினர்களின் தகவலுக்காகப் படிக்கிறேன்.

" பெரு மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு,

தமிழகச் சட்டமன்றப் பணிகளில் கடந்த 35 ஆண்டுகளாக இரண்டறக் கலந்து விட்ட நான் இத் திங்கள் 31 ஆம் நாளன்று ஓய்வுபெறவிருக்கும் செய்தியினைத் தங்களின் மேலான கவனத்திற்கு வைக்கிறேன். அந்நாளில் பேரவைக் கூட்டம் இராது என்பதால் இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுத விழைகிறேன்.

1955 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் உதவியாளராகப் பணி புரியத் தொடங்கி, படிப்படியாக பிரிவு அலுவலர், சார்புச் செயலர், துணைச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்று மேலவைச் செயலாளராக 1976 ஆம் ஆண்டிலிருந்து 9 ஆண்டுகளும் 1985 ஆம் ஆண்டிலிருந்து ஆணையர்-செயலாளராகப் பேரவையிலும் பணியாற்றும் பேறினைப் பெற்றுள்ளேன்.

விடுதலை பெற்ற இந்தியாவின் அரசமைப்புச் சட்டப்படி உருவாக்கப்பெற்ற 9 சட்டமன்றப் பேரவைகளின் பணிகளை நிறைவேற்றுவதில் என் வாழ்க்கையின் பெரும் பகுதியினை அர்ப்பணிக்கும் அரிய பெரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியதை எண்ணி நான் பெருமிதம் கொள்கிறேன். மறக்கவொண்ணாத அந்த நீண்ட நெடிய பயணத்தின்போது பல அறிஞர்களுடனும் சான்றோர்களுடனும் நெருங்கிப் பழகிடும் நல் வாய்ப்பை எனக்கு நல்கியது புகழ்மிக்க நம் சட்டமன்றமே எனில் மிகையாகாது.

" கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி "

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கே எனது தாரகமந்திரமாக இருந்தது. எனக்கிடப்பட்ட பணியின் அவசரத்தையும் முக்கியத்தையும் உணர்ந்து அந்தப் பணிக்கு என்னைத் தகுதியாக்கிக் கொண்டு சட்டமன்ற நடைமுறைகளை நன்கு ஆய்ந்தறிந்து பேரவையின் அலுவல்கள் செவ்வனே சிறப்பாக நடைபெற்றிட, உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளைச் சீரிய முறையில் ஆற்றிட உறுதுணையாக இருப்பதுவே என்னுடைய குறிக்கோளாக இருந்து வந்திருக்கிறது.

பேரவைச் செயலாளர் ஒவ்வொரு நாளும், பலதரப்பட்ட கொள்கைகளையுடைய உறுப்பினர்களுடன் தொடர்புகொள்ள வேண்டியுள்ளது. அவர் அரசுக்கும், அதே சமயத்தில் மாறுபட்ட

1990 மே 11] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

கொள்கைகளையுடைய மற்றக் கட்சிகளுக்கும் பணியாற்ற வேண்டியுள்ளது. சில சமயங்களில் இந்த இரண்டுக்கும் பாலமாக அமைந்து பேரவையின் நடவடிக்கை செவ்வனே நடைபெற வழிவகை செய்ய வேண்டியுள்ளது. இங்குக் கீழ்க்கண்ட வாசகத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாகும் :

'..The clerks of the House in all Parliments are a some what mysterious breed. They need to be self-effacting, they must not seek publicity and they are part of a complicated sub-culture because to an extent they are involved in the political environment, but they must not have anything to do with politics they must be entirely a political, and totally professional. These demands require an extraordinary person to meet them..'

மேலவை மற்றும் பேரவைச் செயலாளராக நான் பணியாற்றிய 14 ஆண்டுகாலத்தில் தென்றல் காற்றின் குளுமையை அனுபவித்ததும் உண்டு; புயற்காற்றின் வேகத்தைச் சந்திக்க வேண்டிய கட்டமும் இருந்தது. அப்போதெல்லாம் நான் அமைதி காத்து, பதட்டம் ஏதுமின்றி, அவையின் விவாதத்தின் வெப்பத்தில் என்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல், அவைமுன் உள்ள பிரச்சினைகளைப் பாரபட்சமின்றி ஆய்ந்து, பேரவைத் தலைவருக்கு என் கருத்துக்களை வழங்கியுள்ளேன்.

சட்டமன்றத்தின் இறையாண்மையைக் காப்பதிலும் எனது கடமைகளைச் சீரிய முறையில் நிறைவேற்றுவதிலும் எனக்கு உறுதுணையாக நின்றவை — எனக்கு முன் இப்பேரவையின் செயலாளராகப் பணியாற்றியவர்களிடம் நான் கற்ற பாடமும், பெற்ற அனுபவமும் மட்டுமல்ல, நுண்மாண் நுழைபுலமிக்க பேரவைத் தலைவர்கள் என்மீது வைத்திருந்த நம்பிக்கையும் மற்றும் என் கீழ் பணியாற்றும் அலுவலர்கள் எனக்கு அளித்த இதயப்பூர்வமான ஒத்துழைப்பும் ஆகும்.

பேரவைச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்கள், முதலமைச்சர்கள், பேரவை முன்னவர்கள், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகிய அனைவரிடமிருந்தும் நான் அளவிடற்கரிய அன்பையும் பேராதரவையும் பெற்றேன். எனது குறைகளைப் பொருட்படுத்தாமல் ஊக்கமளித்த அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் காணிக்கையாக்குகிறேன்.

என்மீது நம்பிக்கையும் அன்பும் காட்டிய தங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவை முன்னவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவருக்கும், அமைச்சர்களுக்கும், கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், எனது பணிவான வணக்கத்தையும் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சில சட்ட மன்றங்களில் தமிழகச் சட்டமன்றமும் ஒன்று. அத்தகைய புகழ்மிக்க சட்டமன்றத்தில் பணியாற்றுவதற்குக் கிட்டிய அரியதோர் வாய்ப்பை நான் என் வாழ்க்கையில் பெற்ற பெறுதற் கரிய பெரும்பேறு என்று கருதுகிறேன். நமது சட்டமன்றத்திற் கென்று ஒரு தனிச் சிறப்பும் பாரம்பரியமும் உண்டு. அதைப் பேணிக் காக்கவும் அதற்கு மென்மேலும் வலிவும் பொலிவும் ஊட்டிடவும் வேண்டுமென்ற எனது பணிவான வேண்டுகோளைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.'' (மேசையைத் தட்டும் ஒலி.)

10-40 மணி

(ஆ) மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு உறுப்பினர் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பினைத் தொடர்ந்து திரு. தி. ரா. மாசிலாமணி அவர்களின் பெயர் முன்மொழியப்பெற்றது. எனவே, மேற்குறித்த பதவிக்கு திரு. தி. ரா. மாசிலாமணி அவர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று நான் பேரவைக்கு அறிவிக் கிறேன்.

5. விதி 111-இன் கீழ் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் அறிக்கை.

துணை வினாவிற்கு அளித்த விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் துணைக் கேள்விக்கு அளித்த பதிலில் திருத்தப்படவேண்டிய பகுதி. ''இவர்களெல் லாம் 9-4-1988-லேயே சில சலுகைகள் கொடுக்கப்பட்டு நிய மிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இவர்களுக்கு 20-2-1990-லே யிருந்து அந்தப் பழைய ஆணைக்கு உயிரூட்டி அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அந்தப் பழைய ஊதியத்தைப் பறிகொடுக்காமல், அவர்களுக்கு அந்த ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து அவர்களுடைய பணிகள் வரன்முறை செய்யப்பட்டிருக்கிறது''.